சுருக்கம்

செய்தி மற்றும் சுற்றுலாத் துறை –நினைவகம் -காமராசர் சாலை –மெரினா கடற்கரையில் – மீண்டும் கண்ணகி சிலை நிறுவுதல் –செலவினத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

---

செய்தி மற்றும் சுற்றுலா (நினைவகம்)த்துறை

அரசாணை (நிலை)எண்.93 நாள் 18.5.2006

படிக்கவும்.

ஆணை:

சென்னை காமராசர் சாலையில் அமைக்கப்பட்டிருந்த கண்ணகி சிலை 6.12.2001 அன்று அதிகாலை 3.15 மணியளவில் லாரி மோதியதால் சிலை அகற்றப்பட்டு சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 19.12.2001 அன்று பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் கண்ணகி சிலையை அதே இடத்தில் நிறுவ அரசு முடிவெடுத்துள்ளது. சிலையினை அமைக்க புதிய பீடம் கட்டவும், சிலைகளிலுள்ள பழுதுகள் நீக்கவும் ரூ. 4.90 இலட்சம் செலவாகும் என தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) பொதுப்பணித்துறை, சென்னை, மதிப்பீடு அனுப்பியுள்ளார்.

2) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் வேண்டுகோளை ஏற்று, சென்னை மெரினா கடற்கரையில் மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலை நிறுவ ரூ.4.90 (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இப்பணியின் அவசரம் கருதி நியமன முறையில் பணி மேற்கொள்ள அரசு அனுமதியளிக்கிறது.

3)பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

4220 செய்தி மற்றும் விளம்பரம் குறித்த மூலதன செலவு-60 ஏனையவை-101
கட்டிடங்கள்-I திட்டத்தில் சேராதது –AC கட்டிடங்கள்-16 பெரும்பணிகள்
(DPC 4220 60 101 AC1603)

4)தேவையான நிதி 2006-07 ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். 2006-07 ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதியொதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மேற்படி பணியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

5) 2006-07 ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கான கருத்துருவில் இச்செலவினத்தையும் சேர்த்திடுமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6)இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.30736/நிதி (செமசு)/2006 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.96ன் மூலம் இசைவளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. வரப்பிரசாதராவ்
அரசுச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை,
சென்னை 600 005.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
சம்பள கணக்கு அலுவலர், சென்னை 9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/35
கணக்கு அலுவலர், செய்தி மற்றும் சுற்றுலா (வ.செ.பிரிவு)

நகல்:
நிதி (பிஜி.1)(வ.செ.பொ.II/செ(ம)சு)த்துறை,
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்